# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8075202

1. District : மாவட்டம் : சேலம்
   PS: காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு சேலம்
   Year: ஆண்டு : 2020   FIR No.: மு.த.அ. எண் : 4/AC/2020   Date: நாள் : 17.10.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption
   (ii) Act சட்டம்: (Amendment) Act 2018
   (iii) Act சட்டம்:
   Sections பிரிவுகள்: U/S. 7(a) and 7(A)
   Sections பிரிவுகள்: of PC (Amendment) Act
   Sections பிரிவுகள்: 2018 and r/w 102 Cr.P.C.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் : 16.10.2020   Date to : நாள் வரை :
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் :   Time to : நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 17.10.2020   Time : நேரம் : 17.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 17.10.2020   Time : நேரம் : 17.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : ரகசிய தகவலின் பேரில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 5 கி.மீ வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் :
   (b) Address : முகவரி : சூரமங்கலம் சார் பதிவாளர் அலுவலகம், மாரியம்மன் கோவில் தெரு, ஜாகீர் அம்மாபாளையம், சேலம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு. S. சந்திரமௌலி
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : திரு. சுந்தரம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு :
   (d) Nationality : நாட்டினம் : இந்தியர்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் :
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் :
   (f) Occupation : தொழில் : துணை காவல் கண்காணிப்பாளர்
   (g) Address : முகவரி : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   ① திரு. பி. கனகராஜ், சார் பதிவாளர், சூரமங்கலம், ② திருமதி. D. ஜெயந்தி, தகவல் தொகுப்பு பணியாளர், சார் பதிவாளர் அலுவலகம், சூரமங்கலம் மற்றும் ③ திரு. P. சீனிவாசன் சூரமங்கலம் சார் பதிவாளர் அலுவலக சில்லரைப் பணிகளுக்காக அமர்த்தப்பட்டிருக்கும் தனி நபர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் திரு. S. சந்திரமௌலி பதவி ADSP, V&AC, Salem. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17.10.2020

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ..........

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2020 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) and 7 (A) மற்றும் 102 Cr.P.C. ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12 ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

சேலம் வட்டம், ஜாகீர் அம்மாபாளையம் மெயின்ரோட்டில் இயங்கி வரும் சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஆகிய நான் சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் மற்றும் குழுவினருடன் இணைந்து 16.10.2020 ஆம் தேதி மாலை சுமார் 15.45 மணி முதல் 16/17.10.2020 காலை 05.45 மணி வரை திடீர் சோதனை மேற்கொண்டேன். இந்த திடீர் சோதனையானது, சூரமங்கலம் சார்பதிவாளர் மரு.ப்பி. கனகராஜ் மற்றும் சார்பதிவாளர் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் மேற்படி அலுவலகத்திற்கு பத்திரப்பதிவு, திருமணப்பதிவு, வில்லங்க சான்று நகல் வழங்குதல், பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச்சான்றிதழ் வழங்குதல் மற்றும் அந்த அலுவலகத்தில் செய்ய வேண்டிய இதர பணிகளுக்காக தங்களது அலுவலகம் வரும் பொது மக்களிடம் அரசுக்கு கட்ட வேண்டிய கட்டணம் போக கூடுதலாக, அதாவது தங்களது பதவிகளை தவறாகப் பயன்படுத்தி நேரடியாகவும், பத்திர எழுத்தர்கள், ரியல் எஸ்டேட் புரோக்கர்கள் மற்றும் அவர்களுடைய உதவியாளர்கள் மூலம் கையூட்டு கேட்டு பெறுவதாகவும், கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் பேரில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது தனிநபர்களான திரு.கே.பாலாஜி என்பவரிடமிருந்து ரூ.5,000/–, திரு.எஸ்.எம்.பரமசிவம் என்பவரிடமிருந்து ரூ.5,000/–, திரு.A. துரைசாமி என்பவரிடமிருந்து ரூ.8,300/–, திரு.P.கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து ரூ.5,000/–, திருமதி.A.கலைச்செல்வி என்பவரிடமிருந்து ரூ.5,000/–, திரு. P. சத்தியராஜா என்பவரிடமிருந்து ரூ.5,000/–, திரு.விஜய ஆனந்த் என்பவரிடமிருந்து ரூ.5,200/–, திரு.பி.சீனிவாசன் என்பவரிடமிருந்து ரூ.5,100/–, திரு.A.G.கேசவன் என்பவரிடமிருந்து ரூ.20,000/–, திரு.ஆர்.சாமிக்கண்ணு என்பவரிடமிருந்து ரூ.3,100/– திரு.என்.சாகுல்ஹமீது என்பவரிடமிருந்து ரூ.4,500/–, திரு. எஸ்.சக்திவேல் என்பவரிடமிருந்து ரூ.2,300/–

சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகைகள் சோதனைக் குழுவினரால் கைப்பற்றப்பட்டது. மேற்படி நபர்களிடம் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பெறப்பட்டது. சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி. D.ஜெயந்தி அவர்களால் அவரிடம் ஆவண எழுத்தர் திருமதி.புஸ்பா (எ) புஸ்பவள்ளி கொடுத்த பணம் 500 X 20 = 10,000/- மற்றும் 200 X 1= 200 ஆக மொத்தம் ரூ.10,200/– ஐ வாங்கி தனது ராமர் புளு கலர் ரெக்ஷின் பேக்கில் வைத்திருந்ததாகவும் சொல்லி சோதனைக் குழுவினரிடம் ஆஜர் படுத்தப்பட்ட பணம் ரூ.10,200/–ம் சோதனைக் குழுவினரால் கைப்பற்றப்பட்டது. திரு.பி.சீனிவாசன் என்ற தனி நபரால் சார்பதிவாளர் அலுவலக கணினி அறையில் தென்மேற்கு மூலையில் இருந்த கம்ப்யூட்டர் டேபிளுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்ட பணம் ரூ.6,000/–, மேற்படி திரு.சீனிவாசனிடமிருந்து அவர் ஆஜர்படுத்திய பணம் ரூ.4,580/–, சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்கள் சாப்பிடும் அறையின் மேற்கு பக்கம் வடக்கு சுவற்றில் உள்ள சிமெண்ட் ரேக்கில் அடுக்கப்பட்டிருந்த பதிவேடுகளுக்கு இடையிலிருந்து ஒரு கற்றையாக வைக்கப்பட்டிருந்து திரு.சீனிவாசனால் ஆஜர் படுத்தப்பட்ட பணம் ரூ.52,550/–, மேற்படி பணத்துடன் வைக்கப்பட்டிருந்த Alteration ZOOOTY 288 Monti Piaza, Junction main road, 5 – Road, Salem- 636004 என்ற கடையின் 05.10.20 தேதியிட்ட சீனிவாசன் பெயரில் வழங்கப்பட்டுள்ள எண். 391 Phone 9750464667 என்ற பில் ஒன்று, மற்றும் 15.10.2020 தேதியிடப்பட்ட ஆவணங்கள் விபரங்கள் அடங்கிய தாள் ஒன்று, 18.09.2020 தேதியிடப்பட்ட ஆவணங்கள் விபரங்கள் அடங்கிய தாள் ஒன்று, 19.09.2020 தேதியிடப்பட்ட ஆவணங்கள் விபரங்கள் அடங்கிய தாள் ஒன்று ஆகியவைகளும், மேற்படி சாப்பிடும் அறையின் மேற்கு பக்கம் வடபுற சுவற்றில் உள்ள பதிவேடுகளை சோதனை செய்தபோது பதிவேடுகளுக்கிடையில் ஒரு கற்றையாக மறைத்து வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.25,000/– மேற்படி தொகையுடன் தொகைகள் மற்றும் பெயர் விபரங்கள் எழுதப்பட்ட ஒரு துண்டுச் சீட்டும், Order Form Maruthi Digital Art, Flex Printing Steel Plant main road, Puthu road bus stop, Salem என்ற நிறுவனம் திரு.K.K. Nagaraj Cell 9952665859 என்பவருக்கு 09.09.2020 ஆம் தேதியில் பில் நெம்பர் 476 ன் படி வழங்கப்பட்ட ரசீது ஒன்று, ஒரு வெள்ளைத்தாளில் கார்த்திக் – 800

...ற்ற பெயர் விபரங்களுடன் மற்றும் பல நபர்களின் பெயர்களும் அவைகளுக்கு எதிரே தொகைகளும் குறிப்பிடப்பட்டுள்ள தாள் ஒன்றும் சோதனைக் குழுவினரால் கைப்பற்றப்பட்டது. பதிவறையின் தெற்கு பக்கமாக உள்ள ஒரு சிறிய அறையில் வைக்கப்பட்டிருந்த அட்டைப்பெட்டியில் ஒரு கற்றையாக வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.67,500/–, பதிவறையில் இருந்த பீரோவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ.4,500/– ஆக மொத்தம் ரூ.2,43,830/–ம் மற்றும் ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது சூரமங்கலம் சார்பதிவாளர் மரு. ப்.பி கனகராஜ், தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி. D.ஜெயந்தி, தனி நபர் சீனிவாசன் ஆகியோர்களிடம் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இதர விபரங்கள் இந்த திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கை மற்றும் நடவடிக்கையின்போது பெறப்பட்ட வாக்குமூலங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.2,43,830/–, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேற்படி நடவடிக்கையின்படியும் இதர ஆவணங்களைப் பரிசீலித்தும் மேற்கண்ட எதிரிகள், சூரமங்கலம் சார்பதிவாளர் மரு. ப்பி. கனகராஜ், தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி. D.ஜெயந்தி மற்றும் திரு.பி.சீனிவாசன், சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக சில்லறைப் பணிகளுக்காக அமர்த்தப்பட்டிருக்கும் தனி நபர் அரசுப் பணி செய்வதற்காக கையூட்டு பெறுவது உறுதி செய்யப்பட்டு முதல் நோக்கு இருப்பதாலும், பிடிக்கக் கூடிய குற்றம் என்பதாலும் மேற்படி எதிரிகள் மீது u/s 102 Cr.PC r/w Sec. 7 (a) & 7(A) of Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி குற்றம் புரிந்துள்ளார்கள் எனத் தெரிகிறது.

எனவே மேற்கண்ட எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிய அனுமதி வேண்டி காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களிடம் வாய்மொழியான அனுமதி பெறப்பட்டு அதன்பேரில் சேலம் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.4/AC/2020 u/s 102 Cr.PC r/w Sec. 7 (a) & 7(A) of

Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையின் அசலினையும், 16.10.2020ஆம் தேதியிட்ட நடவடிக்கை குறிப்பையும் (Proceedings), நடவடிக்கையின்போது பெறப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,43,830/– ஆகியவற்றை கனம் தனிநீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள் விசாரணை நீதிமன்றம், சேலம் அவர்களுக்கு அனுப்பியும், அதன் ஒரு நகலினை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியும் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

17/10/2020

கூடுதல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.